www.Padasalai.Net www.TrbTnpsc.com

VNR11Acc

விருதுநகர் மாவட்டம்
முதல் திருப்புதல் தேர்வு - 2024

வகுப்பு 11
கணக்குப்பதிவியல்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

பகுதி -I

**20×1=20**

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

1) இருப்புநிலைக் குறிப்பு வணிகத்தின் .............. காண்பிக்கிறது
அ) இலாபத்தினை ஆ) நிதிநிலையினை
இ) விற்பனையை ஈ) கொள்முதலை

2) கீழ்க்கண்டவற்றுள் வேறுபட்ட ஒன்றை கண்டுபிடி
அ) கணக்குப்பதிவியல் ஆ) கணக்கியல்
இ) கணக்கேடுகள் பராமரிப்பு ஈ) தள்ளுபடி

3) இருப்பாய்வைப் பாதிக்காத பிழைகள்
அ) விதிப்பிழைகள் ஆ) அதிகமாகக் கூட்டுதல் பிழைகள்
இ) குறைவாகக் கூட்டுதல் பிழைகள்
ஈ) பகுதி விடு பிழைகள்

4) சில்லறை ரொக்க ஏட்டின் இருப்பு
அ) ஒரு செலவு ஆ) ஒரு இலாபம்
இ) ஒரு சொத்து ஈ) ஒரு பொறுப்பு

5) வங்கி மேல்வரைப்பற்று எதில் காண்பிக்கப்படும்
அ) வியாபாரக் கணக்கில் ஆ) இலாபநட்டக் கணக்கில்
இ) கடன் பக்கத்தில் ஈ) சொத்து பக்கத்தில்

6) பின்வருவனவற்றில் எது கணக்கியலின் பிரிவுகளில் இடம் பெறாது
அ) நிதிநிலைக் கணக்கியல் ஆ) மேலாண்மைக் கணக்கியல்
இ) மனிதவளக் கணக்கியல் ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

7) வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிக்கப்படுவது
அ) வங்கியரால் ஆ) வணிகத்தால்
இ) வணிகத்தின் கடனாளிகளால் ஈ) வணிகத்தின் கடனீந்தோரால்

8) விற்பனை ஏட்டில் பதிவு செய்வதற்கு பயன்படும் அடிப்படை ஆவணம்
அ) பற்றுக் குறிப்பு ஆ) வரவு குறிப்பு
இ) இடாப்பு ஈ) ரொக்க இரசீது

9) திருத்தியமைக்கப்பட்ட மென்பொருள் இவைகளுக்கு ஏற்றவை
அ) சிறிய, பாரம்பரிய வணிகம் ஆ) பெரிய, நடுத்தர வணிகம்
இ) பெரிய, தனித்தன்மையான வணிகம் ஈ) மேலே கூறிய எதுவும் இல்லை

10) கு.ப.எ என்பது
அ) பேரேட்டு பக்க எண் ஆ) குறிப்பேட்டு பக்க எண்
இ) சான்று சீட்டு எண் ஈ) ஆணை எண்

11) GAAP என்பது
அ) பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள்
ஆ) பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்
இ) பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள்
ஈ) இவற்றுள் ஏதுமில்லை

12) பின்வருவனவற்றில் எது கணினி அமைப்பின் கூறு அல்ல?
அ) உள்ளீட்டு அலகு ஆ) வெளியீட்டு அலகு
இ) தரவு ஈ) மையச் செயல்பாட்டு அலகு

13) ரொக்க ஏடு பதிவு செய்வது
அ) அனைத்து ரொக்க பெறுதல்கள் ஆ) அனைத்து ரொக்க செலுத்தல்கள்
இ) அ, ஆ ஆகிய இரண்டும் ஈ) அனைத்து கடன் நடவடிக்கைகள்

14) இரட்டைப் பதிவு முறையில் கணக்குகளைப் பதிவு செய்யும் போது நடவடிக்கைகள் பாதிப்பது
அ) குறைந்தபட்சம் இரண்டு கணக்குகள்
ஆ) ஒரே கணக்கில், வெவ்வேறு தேதிகளில்
இ) ஒரே கணக்கில் இரு பக்கங்களில்
ஈ) குறைந்த பட்சம் மூன்று கணக்குகள்

15) இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்த கணக்குகளை உள்ளடக்கி இருக்கும்?
அ) ஆள்சார் கணக்குகள் மட்டும் ஆ) சொத்துக் கணக்குகள் மட்டும்
இ) பெயரளவு கணக்குகள் மட்டும் ஈ) அனைத்து கணக்குகளும்

16) திரையரங்கத்தின் இருக்கை வசதிகளை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள்
அ) முதலினச் செலவு ஆ) வருவாயினச் செலவு
இ) நீள்பயன் வருவாயினச் செலவு ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

VNR11Acc

17) ஒரு சொத்து எதன் காரணமாக வழக்கொழிவு அடைகிறது?
அ) காலப்போக்கு
ஆ) தேய்வு மற்றும் உராய்வு
இ) தொழில்நுட்ப மாற்றங்கள்
ஈ) மேற்கூறியவற்றில் ஏதுமில்லை

18) கீழ்கண்டவற்றுள் எது சரியானது?
அ) சொத்துக்கள் = பெறுப்புகள் – முதல்
ஆ) சொத்துகள் = முதல் – பொறுப்புகள்
இ) சொத்துக்கள் = பொறுப்புக்கள் + முதல்
ஈ) சொத்துக்கள் = புறப்பொறுப்புகள்

19) பின்வரும் எந்த சொத்துகளுக்கு வெறுமையாதல் முறையில் தேய்மானம் நீக்கப்படுகிறது
அ) பொறி மற்றும் பொறி இயந்திரம்
ஆ) சுரங்கம் மற்றும் கற்சுரங்கங்கள்
இ) கட்டடங்கள்
ஈ) வணிகக்குறி

20) இறுதி சரக்கிருப்பு மதிப்பிடப்படுவது
அ) அடக்க விலையில்
ஆ) சந்தை விலையில்
இ) அடக்க விலை அல்லது சந்தை விலை இதில் எது அதிகமோ அந்த விலையில்
ஈ) அடக்க விலை அல்லது நிகரத் தீர்வு மதிப்பு இதில் எது குறைவோ அந்த விலையில்

## பகுதி -II

**II. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×2=14**
**வினா எண் 30க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21) சாதாரண ரொக்க ஏடு என்றால் என்ன?
22) கூடியுள்ள வருமானம் என்றால் என்ன?
23) கணக்கியல் மென்பொருளின் வகைகள் யாவை?
24) பகுதி விடு பிழை என்றால் என்ன?
25) பின்வரும் செலவினங்கள் எவ்வகை எனக் காண்க.
i) உற்பத்தியை இரண்டு மடங்காக அதிகரிக்க சேர்க்கப்பட்ட கூடுதல் இயந்திரத்தின் மதிப்பு ரூ.2,000
ii) கவனக் குறைவால் ஏற்பட்ட பழுதினைச் சரி செய்ய ரூ.1,200 செலவழிக்கப்பட்டது
26) கணக்கியல் தகவல்களில் ஆர்வமுடைய நபர்கள் யாவர்?
27) கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு 2018 மார்ச்-31ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிக்கவும்
அ) வங்கி அறிக்கையின்படி பற்றிருப்பு ரூ.2,500
ஆ) செலுத்திய காசோலை இன்னும் வசூலித்து வரவு வைக்கப்படவில்லை ரூ.10,000
இ) இணைய வங்கி மூலம் செலுத்திய தொகை ரூ.2,000 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை
28) கீழக்கண்ட விவரங்களிலிருந்து நேர்க்கோடு முறையில் தேய்மான தொகையை கணக்கிடுக.
சொத்தின் அடக்கவிலை ரூ.10,000
எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் 10 வருடங்கள்
எதிர்நோக்கும் இறுதி மதிப்பு ரூ.2,000
29) கீழக்கண்ட கணக்குகளின் இருப்புக்கள் இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் இடம்பெறுமா அல்லது வரவுப் பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டுக.
i) வெளித்தூக்கு கூலி ii) விற்பனை iii) முதலீடுகள் iv) வாராகடன்
30) பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளுக்கான விளக்கக் குறிப்பு தருக

| நாள் | விவரம் | பே.ப.எண் | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| i) | வங்கி க/கு ப | | 2000 | |
| | பங்காதாயம் க/கு | | | 2000 |
| ii) | எடுப்புக்கள் க/கு ப | | 12000 | |
| | கொள்முதல் க/கு | | | 12000 |

## பகுதி -III

**III. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×3=21**
**வினா எண் 40க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31) முப்பத்தி ரொக்க ஏட்டின் படிவம் தருக.
32) தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?
33) நீள் பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன?

www.Padasalai.Net www.TrbTnpsc.com



34) வியாபாரி ஒருவரின் 31.12.2016 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ.50,000
சரிக்கட்டுதல்கள்
அ) வாராகடன் ரூ.1,000 போக்கெழுதவும்
ஆ) 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கவும்
இ) 2% கடனாளிகள் மீது தள்ளுபடி ஒதுக்கு உருவாக்கவும்
இவ்விவரம் வியாபாரிகள் இலாபநட்டக் கணக்கு மற்றும் இருப்புநிலைக்குறிப்பில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்

35) கணக்கியலின் முக்கியத்துவத்தை விரிவாக விளக்குக. (ஏதேனும் 3)

36) ஒரு வணிக நிறுவனம் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும் - விளக்குக.

37) 2018, ஏப்ரல் 1 அன்று ராம் என்பவரின் ஏடுகளில் கீழ்க்கண்ட இருப்புகள் காணப்பட்டன.

**சொத்துகள் :** ரொக்கம் ரூ.40,000
சரக்கிருப்பு ரூ.50,000
இயந்திரம் ரூ.40,000
ரவியிடமிருந்து பெற வேண்டியது ரூ.50,000

**பொறுப்புகள் :** ஹரி என்பவருக்கு செலுத்த வேண்டியது ரூ.30,000

தொடக்க பதிவினை தருக.

38) பின்வரும் நடவடிக்கைகளை கண்ணன் & கோ நிறுவனத்தின் விற்பனை ஏட்டில் பதிக.
2017
ஆகஸ்டு 1 : செந்திலுக்கு கடனுக்கு சரக்கு விற்றது ரூ.15,000
ஆகஸ்டு 10 : சுரேஷ் என்பவருக்கு ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ரூ.6500
ஆகஸ்டு 12 : சரண்யாவிற்கு கடனுக்கு சரக்கு விற்றது ரூ.12,500
ஆகஸ்டு 25 : கமலா என்பவருக்கு கடனுக்கு விற்றது
10 மேசைகள் ஒன்று ரூ.1500 வீதம்
20 நாற்காலிகள் ஒன்று ரூ.200 வீதம்

39) முதலின வரவு - வருவாயின வரவு - வேறுபடுத்தவும்

40) கணினிமயக் கணக்கியல் முறையின் குறைபாடுகளில் ஏதேனும் மூன்றினைத் தரவும்

## பகுதி -IV

**IV. அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **7×5=35**

41) அ) குறிப்பேட்டுப் பதிவுகளை எவ்வாறு வகைப்படுத்துவாய்? விளக்குக.

**(அல்லது)**

ஆ) கீழ்க்காணும் சரிக்கட்டுதல்களுக்குத் தேவையான சரிகட்டுப் பதிவுகள் தரவும்
i) இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ரூ.5,000
ii) கொடுபட வேண்டிய சம்பளம் ரூ.150
iii) காப்பீடு முன்கூட்டிச் செலுத்தியது ரூ.450
iv) முன்கூட்டிப் பெற்ற கழிவு ரூ.20,000
v) முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி ரூ.1000

42) அ) பின்வரும் நடவடிக்கைகளைக் குறிப்பேட்டில் பதிந்து பேரேட்டில் எடுத்தெழுதவும்
2017
ஆக 1 : தர்மா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ரூ.70,000
ஆக 6 : கணேசனிடமிருந்து பெற்ற ரொக்கம் ரூ.10,000
ஆக 10 : வாடகை கொடுத்தது ரூ.3000
ஆக 20 : ஆனந்திடமிருந்து பெற்ற கழவு ரூ.5000

**(அல்லது)**

ஆ) கீழ்க்காணும் விவரங்களிலிருந்து டிசம்பர் 31, 2017-ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயார் செய்து, வங்கி அறிக்கையின் படியான இருப்பினைக் கண்டறிக.

| | விவரம் | ரூ. |
|---|---|---|
| i) | ரொக்க ஏட்டின்படி மேல்வரைப்பற்று | 10,000 |
| ii) | செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது | 5,000 |
| iii) | விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது | 1,000 |
| iv) | வங்கி வாடிக்கையாளரிடமிருந்து நேரடியாகப் பெற்றது | 500 |
| v) | வங்கி பற்று வைத்த மேல்வரைப்பற்று மீதான வட்டி | 1,000 |
| vi) | வங்கியால் தவறுதலாக பற்று வைக்கப்பட்ட தொகை | 300 |

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



43) அ) கீழ்க்கண்டவற்றை முதலினம் அல்லது வருவாயினம் என வகைப்படுத்துக.

i) தணிக்கை கட்டணம் செலுத்தியது ரூ.10,000
ii) தொழிலாளர் நலனுக்காகச் செய்த செலவு ரூ.5,000
iii) நிறுவன வாகனத்தின் மீதான பராமரிப்புச் செலவு ரூ.2000
iv) பழைய இயந்திரம் வாங்கி பழுதுபார்த்தச் செலவு ரூ.3,000
v) ஆலை வாடகைச் செலுத்தியது ரூ.12,000

**(அல்லது)**

ஆ) சென்னின் பேரேட்டிலிருந்து 2016, மார்ச் 31 க்கான பின்வரும் இருப்புகள் பெறப்பட்டன. அவரின் வியாபாரக் கணக்கினைத் தயாரிக்கவும்

| விவரம் | ரூ. |
|---|---|
| சரக்கிருப்பு | 10,000 |
| கொள்முதல் | 1,60,000 |
| கூலி | 30,000 |
| உள்தூக்குக்கூலி | 10,000 |
| உள்ஏற்றிச் செலவு | 8,000 |
| விற்பனை | 3,00,000 |
| உள்திருப்பம் | 16,000 |
| வெளித்திருப்பம் | 10,000 |
| எரிவாயு மற்றும் எரிசக்தி | 8,000 |

**கூடுதல் தகவல்கள்**

அ) 31.3.2016 அன்றைய இறுதிச் சரக்கிருப்பு ரூ.20,000
ஆ) கொடுபட வேண்டிய கூலி ரூ.4,000
இ) முன்கூட்டிச் செலுத்திய எரிவாயு மற்றும் எரிசக்தி ரூ.1000

44) அ) இருப்பாய்வு தயாரிக்கப்பட்ட பின் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும். அனாமத்துக் கணக்கு இருப்பதாகக் கருதவும்.

அ) விற்பனை ஏட்டின் மொத்தம் ரூ.2000 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
ஆ) இயந்திரம் ரூ.3000க்கு கொள்முதல் செய்தது கொள்முதல் ஏட்டில் பதியப்பட்டுள்ளது
இ) மதிக்கு ரூ.45க்கு சரக்கு விற்றது அவரது கணக்கில் ரூ.54 என எடுத்து எழுதப்பட்டுள்ளது
ஈ) கொள்முதல் திருப்ப ஏட்டின் மொத்தம் ரூ.200 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.
உ) விற்பனை ஏட்டின் கூட்டுத்தொகை ரூ.1,122 பேரேட்டில் ரூ.1,222 என எடுத்தெழுதப்பட்டுள்ளது.

**(அல்லது)**

ஆ) 2017, மே மாதத்திற்கான அகமது அவர்களின் பின்வரும் நடவடிக்கைகளை தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

| மே | விவரம் | ரூ. |
|---|---|---|
| 1 | கையிருப்பு ரொக்கம் | 40,000 |
| 5 | ஸ்வாதியிடமிருந்து பெற்ற ரொக்கம் | 4,000 |
| 7 | கூலி ரொக்கமாகக் கொடுத்தது | 2,000 |
| 10 | சசிகலாவிடமிருந்து ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது | 6,000 |
| 15 | ரொக்கத்திற்கு விற்பனை செய்தது | 9,000 |
| 18 | கணிப்பொறி வாங்கியது | 15,000 |
| 22 | சபாபதிக்கு ரொக்கம் செலுத்தியது | 5,000 |
| 28 | சம்பளம் கொடுத்தது | 2,500 |
| 30 | வட்டிப் பெற்றது | 500 |

45) அ) ரொக்கத் தள்ளுபடிக்கும் வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளை தரவும்.

**(அல்லது)**

ஆ) இலக்குமி போக்குவரத்து நிறுவனம், அக்டோபர் 1, 2014 அன்று ரூ.8,00,000க்கு கனரக வாகனம் ஒன்றை வாங்கியது. குறைந்து செல் மதிப்பு முறையில் ஆண்டுதோறும் 15% தேய்மானம் நீக்க வேண்டும். 31 மார்ச் 2017-ல் அக்கனரக வாகனம் ரூ.5,00,000க்கு விற்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் மார்ச் 31ல் முடிக்கப்பெறுகின்றன. விற்ற வாகனத்திற்கான இலாபம் அல்லது நட்டத்தினை கணக்கிடவும்.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

46) அ) பிரபு என்பவரின் ஏடுகளிலிருந்து 31.3.2017 அன்று எடுக்கப்பட்ட பின்வரும் இருப்புகளிலிருந்து இருப்பாய்வு தயாரிக்கவும். ஏதேனும் வேறுபாடு இருப்பின் அதனை அனாமத்து கணக்கிற்கு மாற்றவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| அளித்த தள்ளுபடி | 250 | பெற்ற கடன் | 7,000 |
| கைரொக்கம் | 4200 | மின்கட்டணம் | 12,000 |
| முதல் | 50,000 | கழிவு கொடுத்தது | 3,000 |
| சம்பளம் | 12,000 | கொள்முதல் | 29,050 |
| அறைகலன் | 7,500 | விற்பனை | 35,000 |

(அல்லது)

ஆ) கீழ்க்காணும் விவரங்களிலிருந்து டிசம்பர் 31, 2016 ஆம் ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கினை தயாரிக்கவும்

| விவரம் | ரூ. |
|---|---|
| மொத்த நட்டம் | 60,000 |
| விற்பனை மேம்பாட்டிற்கான செலவுகள் | 5,000 |
| வழங்கல் செலவுகள் | 15,000 |
| அளித்த கழிவு | 7,000 |
| கடன் மீதான வட்டி செலுத்தியது | 5,000 |
| கட்டுமச் செலவு (விற்பனையின் மீது) | 4,000 |
| பங்காதாயம் பெற்றது | 3,000 |
| அச்சு (ம) எழுது பொருள் (அலுவலகம்) | 2,000 |
| சட்டச் செலவுகள் | 5,000 |
| வாராகடன் | 1,000 |
| தேய்மானம் | 2,000 |
| வாடகை பெற்றது | 4,000 |
| காப்பீட்டிற்கு உட்படாத தீயினால் ஏற்பட்ட நட்டம் | 3,000 |

47) அ) ரவி என்பவரின் முப்பத்தி ரொக்க ஏட்டை பின்வரும் விவரங்களிலிருந்து தயாரிக்கவும்

| 2017 பிப்ரவரி | | ரூ. |
|---|---|---|
| 1 | கையிருப்பு ரொக்கம் | 25,000 |
| | வங்கி ரொக்கம் | 10,000 |
| 5 | தண்ணீர் சுத்திகரிக்கும் இயந்திரத்தை அலுவலகப் பயன்பாட்டிற்காக காசோலை மூலம் வாங்கியது | 8,000 |
| 6 | ரொக்கம் செலுத்தி சரக்கு வாங்கியது | 9,000 |
| 8 | டேனியலிடமிருந்து பெற்ற ரொக்கம் | 9,900 |
| | வங்கி அவருக்கு அளித்த தள்ளுபடி | 100 |
| 10 | சரக்குகளை விற்று பெற்ற காசோலையை வங்கியில் செலுத்தியது | 40,000 |
| 12 | அமலாவிற்கு காசோலை கொடுத்தது | 14,500 |
| | அவரிடமிருந்து பெற்ற தள்ளுபடி | 500 |
| 13 | போக்குவரத்துச் செலவுகளை ரொக்கமாகச் செலுத்தியது | 5,000 |
| 14 | அலுவலக தேவைக்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது | 20,000 |
| 24 | குமாரிடமிருந்து பெற்ற காசோலை வங்கியில் செலுத்தப்பட்டது | 15,000 |
| 28 | குமாரின் காசோலை வங்கியால் மறுக்கப்பட்டு திருப்பப்பட்டது | |

(அல்லது)

ஆ) தீபக் எழுதுபொருள் நிறுவனத்தின் நடவடிக்கைகள் 2018 மார்ச் மாத நடவடிக்கைகள் பின்வருமாறு இருந்தன. அவைகளை குறிப்பேட்டில் பதிவு செய்க



www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



மார்ச்

| | | |
|---|---|---|
| 1 | ரொக்கத்துடன் வியாபாரம் தொடங்கியது | 2,00,000 |
| 2 | வங்கியில் கணக்கு ஆரம்பித்து பணம் செலுத்தியது | 1,00,000 |
| 3 | பத்மினி நிறுவனத்திற்கு A4 தாள்களை கடனுக்கு விற்பனை செய்தது | 60,000 |
| 4 | பத்மினி நிறுவனத்திடமிருந்து மேற்கண்ட தொகைக்கு பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு பெறப்பட்டது | |
| 5 | பத்மினி நிறுவனத்தின் மாற்றுச்சீட்டு வங்கியில் கொடுத்து தள்ளுபடி செய்து பணம் பெறப்பட்டது | 58,000 |
| 15 | பத்மினி நிறுவனத்தின் மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | |

- - - - - - -

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com